விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 23 புதன்கிழமை (09.11.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 325

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

* மொத்த வருமானம் 477.1 பில்லியன்
* மொத்த செலவினம் 671.5 பில்லியன்
* துண்டுவிழும் தொகை 194.4 பில்லியன்
* சாராயம் 15 ரூபாவால் அதிகரிப்பு
* பியர் 5 ரூபாவால் அதிகரிப்பு
* சிகரட் 50 சதத்தால் அதிகரிப்பு
* அரச ஊழியர்களுக்கு 1300 ரூபா சம்பள அதிகரிப்பு

# வரவு - செலவுத் திட்டம் நேற்று சமர்ப்பிப்பு



(நமது நிருபர்)

2006 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்ட யோசனைகள் நேற்றுப் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 477.1 பில்லியன் ரூபா. மொத்தச் செலவினம் 671.5 பில்லியன் ரூபா. துண்டுவிழும் தொகை 194.4 பில்லியன் ரூபா.

அரச ஊழியர்களுக்கு 1300 ரூபா சம்பள உயர்வு. சாராயம் ஒரு போத்தல் 15 ரூபாவால் உயர்வு. பியர் ஒருபோத்தல் 5 ரூபாவால் அதிகரிப்பு போன்ற யோசனைகள் 2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அபிவிருத்திக்கான செலவிடும் தொகை 671 ஆயிரத்து 517 மில்லியன் ரூபா. துண்டுவிழும் தொகையின் வெளிநாட்டுக் கடன் தொகையானது 69 ஆயிரத்து 850 மில்லியன் ரூபா. வெளிநாட்டு உதவி 10 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா. தேசியப் பொருளாதாரத்தின் மூலம் 121 ஆயிரத்து 541 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணம் 512ஆவது படைப்பிரிவின்

## இராணுவ மின்வேலியில் 'ட்றக்' வாகனம் சிக்கியது!

### எட்டுப் படையினர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் மின்வேலியில் இராணுவ ட்றக் வாகனம் சிக்கியதில் எட்டுப்படையினர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் ஞானம் மற்றும் சுபாஸ் உணவு விடுதிக்கிடையில் அமைந்துள்ள 512 ஆவது படைப்பிரிவின் மின்வேலியிலேயே இச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

படுகாயமடைந்த அனைத்துச் சிப்பாய்களும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். பின்னர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-4)

## தபால்மூலமான வாக்களிப்பு நேற்றுடன் முடிவடைந்தது

### யாழில் 32 வீதமானோர் வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுடன் முடிவடைந்தது. இதில் யாழ். மாவட்டத்தில் 32 வீதமானோரே வாக்களித்துள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்தது.

தபால்மூல வாக்களிப்பு நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்ற 4568 பேரில் 32 வீதமானோரே வாக்களித்துள்ளனர்.

சகல வாக்குச் சாவடிகளிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் இருவர் கைது

(கொழும்பு)

பஸ்ஸரை மடுல்சீமைப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இரு தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டிக்காதென்னப் பிரதேசத்தில் தாம் தற்காலிகமாகத் தங்கியிருப்பதாகவும், தமது சொந்த இடம் கிளிநொச்சி மற்றும் வவுனியா என்றும் இரு இளைஞர்களும் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளனர். (இ)

## கர்ப்பிணிக் கொலையாளிகள் கொழும்பிற்குள் ஊடுருவல்?

வன்னியிலிருந்து இரு கர்ப்பிணி தற்கொலைதாரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக புலனாய்பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது என கொழும்பில் நேற்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலக்கொன்றை எட்டுவதற்காக இரு கர்ப்பிணி தற்கொலையாளிகள் வந்துள்ளனர் என தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அது குறித்து விழிப்புடன் இருப்பதாகவும், தேடுதல் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாகவும் கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவர் இவர்களின் இலக்குகளாக இருக்கலாம் என புலனாய்வுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர் என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ச)

## நேரடி விவாதத்தில் ஈடுபட ரணில் - மகிந்த ஆயத்தம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தம்முடன் விவாதத்திற்கு வருமாறு வேண்டுகோளினை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின்படி இவ்வாறான விவாதம் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னதாக நடைபெறவேண்டுமென்று பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த விவாதத்தை ஏற்பாடு செய்வதற்காக மிகக் குறைந்த காலஅவகாசமே காணப்படுகின்றது. எனவே அதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக பிரதிநிதி ஒருவரை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கவேண்டுமென்றும், தமது பிரதிநிதியாகப் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவினை தான் நியமித்திருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-4)

## வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. பாராளுமன்றத்திற்கு அருகிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை நோக்கிச் செல்லமுற்பட்டபோதும் பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இவ்வாறான வரவு - செலவுத் திட்டம் பொருத்தமற்றது என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை எதிர்ப்பதாகத் தெரிவித்தனர். (இ-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோணி பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்கமாக உளள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல போன்றவை விஷேசமாக செய்யப்படும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் :மேல்மாடி தொடர்பு சு.நாராயணசாமி.
(9966)

# தேவாரப் பண்ணிசை மணியின் ஓசை ஓய்ந்தது

தேவாரத் திருமுறைப பதிகங்களை சொற்பிழை பொருட்பிழையின்றி திருக்கோயில்களில் ஓத வேண்டும். பயபக்தியுடன் பண்ணோடு பாடுவதற்கு சைவப் பெருமக்கள் முன்வரவேண்டும். தித்திக்கும் தேமதுர தமிழோசை திக்கெல்லாம் பரவவேண்டுமென அசையாத நம்பிக்கையுடன் செயறபட்டு வந்தவர் இசை ஆசிரியர் பண்ணிசை மணி வல்லிபுரம் பரமசாமி.

மறைந்த பண்ணிசை மணியினது உள்ளத்திருலிருந்து எண்ணங்கள் பல சைவாலயங்களில் தேவாரத்திருப்பதிகங்களை பண்ணோடும் சொற்பிழையின்றியும் ஓதுவதற்கு தேவாரப்பண்ணிசை ஓதுவார் மூர்த்திகளை நியமித்து அந்தந்த தேவாரங்களுக்கு உரிய பண் தவறாது ஓதுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்பதிலும் ஆசார சீலர்களாக அவர்களை வழிநடத்த வேண்டுமெனவும் பல்வேறு மட்டங்களில் முயற்சி செய்தவர் பண்ணிசைமணி அவர்கள்.

அன்னார் அகில இலங்கைத் திருமுறை மன்ற ஆரம்பகால உறுப்பினருமாவார். மன்றம் நடாத்திவரும் மாதாந்த நிகழ்ச்சிகளிலும் அனேக நிகழ்வுகளில் பங்குபற்றி வந்துள்ளார். இவர்களுடைய திருமுறை இசையை சேவை மனப்பானமையுள்ள இசை வற்றார் என்பதை கருத்திற்கொண்டு அகில இலங்கைத் திருமுறைமன்றம் 09-06-1998ல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நடாத்திய திருமுறைப பெருவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அணமைக் காலங்களில் அனனாரின் உடல்நலக் குறைவால் மன்ற நிகழ்வுகளில் பங்குபற்றா விட்டாலும் நான் அன்னாரின் இல்லம் சென்று வரும்போதெல்லாம் தம்பி தற்பொழுது திருமுறைப் பண்பாடுபவர்கள தேவாரத் திருமுறைப் பதிகங்களை பண்ணை மாத்தி மாத்திப் பாடுகிறார்கள். முக்கியமாக தேனினும் இனிய திருவாசகப் பாடலகளை மோகன இராகத்தில் பாடினால் என்ன பக்திபூர்வமாக இனிமையாக இருக்கும் அதை விட்டு என்னெனனவோ இராகங்களில் பாடுகிறார்கள். இதனை திருமுறை மன்றம் கவனிக்காதா என அடிக்கடி எடுத்துக்கூறி வருவார்.

திருமுறைப் பதிகங்களை மிக உருக்கமாகப் பாடவேண்டும். உணர்ந்து பாடவேண்டும். பக்தியுடன் பாடவேண்டுமென மிகவும மனம் வருந்தி ஆர்வத்துடன் கூறுவார்.

நீறு பூத்த நெற்றியுடன் நல்லூரில் திருவிழாக் காலங்களில் ஆலய வீதியில் அன்னாரை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கும்.

தான்பெற்ற குழந்தைகள் அனைவரையும் இசைத் துறையில் மிகவும் நல்ல முறையல பயிற்சி பெற வழிவகைகளை செய்து உலகம் போற்றும அளவுக்கு வெளிநாடுகளிலும் ஈழத் திருநாட்டிலும் இசை பரவுவதற்கு ஆவன செய்துள்ளதும் குறிப்பிடத்தக்க பெருந்தொண்டாகும்.

அன்னாரிடம் இசைப்பயிற்சி, பண்ணிசைப் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலர் இன்னும் ஈழத திருநாட்டில் உள்ளனர்.

அன்னாரின் ஆத்மா இறைபதத்தில் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரைப் பிரிந்து ஆறாத் துயரில உள்ள குடும்பத்தார் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். □

சி.கிருஷ்ணமூர்த்தி
அமைப்பாளர்
அகில இலங்கைத் திருமுறை மன்றம

### போசாக்கான உணவு தயாரிப்புப் பயிற்சி

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வதியும் பொதுமக்களுக்கு போசாக்கான உணவு தயாரிப்பு சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை, மருதங்கேணி, சன்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சோந்த மக்களுக்கு உலக உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களத்தின விரிவாக்கற பகுதியினரால இவ் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

(அ-36)

# கனடாவில் பாராட்டுவிழா

(கொழும்பு)

அகில இலங்கைச் சமாதான நீதிபதியும், முன்னாள் சுங்கத் திணைக்கள ஆணையாளரும், சைவப் பெரியாருமான பரோபகாரமணி கே.கே.சுப்பிரமணியத்திற்கு கனடா வாழ் சைவ மக்களால் கடந்த 21ஆம் திகதி ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

ஆதி அருள் நெறிமன்றத் தலைவர் சைவப் பெருமகன் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விழா நாயகனுக்கு ‘சிவ நெறிக் காவலர்’ எனும் விருது வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின்போது ஆசியுரையை வரசித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு பஞ்சாட்சர குருக்களும், சுன்னாகம் சிவன் கோவில் சோமாஸ்கந்த குருக்களும் வழங்கினர்.

தமிழ்கடல் புலவர் ஈழத்து சிவானந்தன், கனடா சைவசித்தார்ந்த மன்றத் தலைவர் தி.விஸ்வலிங்கம, சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம்,யாழ்ப்பாணம் தவில மேதை என்.ஆர்.சி.சுதாகர் ஆகியோர் பாராட்டுரைகளை ஆற்றினார்கள்.

(அ-7)

# காலத்துக்குத் தேவையானது ‘மஹிந்தவின் சிந்தனை’ வானொலிப் பேச்சில் எல்லே குணவன்ச தேரர் பாராட்டு

‘மஹிந்தவின் சிந்தனை’ தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாடடையும் இறைமையையும் பாதுகாப்பதற்காக இம்முறை ஜனாதிபதித் தோதலின்போது அனைத்து இலங்கையர்களும் கூட்டாகச் செயற்படவேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சுபாரதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், தற்காலத்தல் வாக்குறுதிகளை அளிக்கும் அரசியலனூடாக இளைஞர்களைத் திசைதிருப்ப முடியாது என்று குறிபபிட்டார்.

நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பக்கூடிய நிரந்தரக் கொள்கைத் திட்டம் ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அடித்தளத்தை அமைப்பது மக்களின் தலையாய கடமையாகும்.

நாட்டின் பாதுகாபபு, தேசிய பொருளாதாரக் கொள்கை தொடர்பாக மஹிந்தவின் சிந்தனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் காலத்திற்குப் பொருத்தமானவை என்று அவர் பாராட்டினார்.

மதங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி மதத்தலைவர்களும் நாட்டு மக்களும் ஒன்றிணைந்து நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கூறினார். (து-7)

## இராசிபலன்

09.11.2005
(ஐப்பசி 23, புதன்கிழமை)
அட்டமி முன்னிரவு 6.59மணிவரை
திருவோணம் முற்பகல் 9.22 மணிவரை
இராகுகாலம்-12.05-1.35 மணிவரை
சுபநேரம்-4.35-6.05மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய அனுகூலம், அதிகாரம், ஆரோக்கியம். |
| இடபம் | பிதாசிந்தை, முயற்சி தாமதம், கட்டுப்பாடு, பணவிரயம். |
| மிதுனம் | வீண் பிரச்சினை, காரிய தடங்கல், அபகீர்த்தி, போசனசுகம். |
| கடகம் | மாதர் நட்பு, மனோதைரியம், பிரயாணம், காரிய அனுகூலம். |
| சிங்கம் | போசனசுகம், புதிய விடயம், எடுத்தகாரியம் கைகூடும், உடல் நலம். |
| கன்னி | பணக்குறைவு, காரிய இடையூறு, சுபசெலவு, மனக்கவலை. |
| துலாம் | தன்னம்பிக்கைக் குறைவு, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | மனோதைரியம், நற்கீர்த்தி, நல்ல முயற்சி, தொழில் நன்மை. |
| தனுசு | விவாதம், அதிகசெலவு, திடீர் நன்மை, முயற்சி தாமதம். |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம், புதிய முயற்சி, சிந்தனை மிகுதி. |
| கும்பம் | பிரயாணம், சோம்பல்நிலை, தனவிரயம், காரிய தாமதம். |
| மீனம் | சனேகிதர் சந்திப்பு, மனமகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, காரிய அனுகூலம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு ‘மகா பொல’ கொடுப்பனவு

கடந்த வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மகாபொல புலமைப்பரிசில் நிதியம் தெரிவித்துள்ளது.

9 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களும் மற்றுமொரு நிறுவனத்தில் உயர்கல்வி கற்கத் தகுதிபெற்ற ஆயிரம் பேரும் இந்த வருட புலமைப் பரிசிலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவா.

மகாபொல நிதிய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், இதுவரை தமது சொந்த விபரங்களை சமர்ப்பிக்கத் தவறிய மாணவர்கள் கூடிய விரைவில் அவறறை சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். (து-7)

# பாதீனியம் ஒழிப்பு

கடநத மாதம் சூழல் பாதுகாபபு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் களை அதிகமாகக் காணப்படும் ஏழு விவசாய போதனாசிரியர் பிரிவுகள் அந்தந்த பிரதேச சபைகளுடன் இணைந்து பாதீனியத்தை அழிக்கும் நடவடிக்கைகள்ள மேற்கொண்டன.

ஆனாலும் தற்போது பெய்யும் பருவமழையினால் பாதீனியம் செடி மீண்டும் முளைவிட ஆரம்பித்துள்ளது. எனவே பொதுமக்கள் தமது சுற்றாடலில் உள்ள செடி பூபபதற்கு முன் வேருடன் பிடுங்கி வருமாறு விவசாய திணைகளத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப பாதீனிய செடியை பூக்கள் உருவாக முன்னரே அழிக்கும் நட்வடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இளம் பருவத்திலேயே இதனை மண்வெட்டியால் கொத்தி எரித்தல், இக் களை காணப்படும் பிரதேசத்திலிருந்து வேறு இடங்களுக்கு மண் கொண்டு செல்வதைத் தவிர்த்தல், பாதீனியத தன்பூக்கள் உள்ள பகுதியை ஏனைய பயிர்களுடன் கொண்டு செல்வதைத் தவிர்த்தல் கிளை வோசெட அல்லது 24டி களை நாசினியை தாவரம் நனகு நனையும்வரை விசிறுதல் போன்ற முறைகள் மூலம் கட்டுப்படுத்தலாம் என விவசாய உத்தியோகத்தர் கே.சிறி பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (அ-36)

# ஜனாதிபதித் தேர்தலில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்கள்

## உயர்நீதிமன்ற உத்தரவு இன்று

வடக்கு-கிழக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது தொடர்பாக கடைப்பிடிக்க வேணடிய நடைமுறைகள் உள்ளடங்கிய இடைக்கால உத்தரவு இன்று உயர் நீதிமன்றத்தால் தேர்தல் ஆணையாளருக்கு பிறபபிக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாககளிப்பு நிலையங்களை அமைகக வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னரே உயர் நீதிமன்ற நீதியரசர் சரத என் சில்வா இதனைத் தெரிவித்தார்.

இலங்கை முற்போக்கு முன்னணியின் தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான நெல்சன் பெரேரா தாக்கல் செயதிருந்த மனு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான 10 விடயங்கள் அடங்கிய கடிதத்தை சட்டமா அதிபர் ஊடாக தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வருவதற்கான போக்குவரத்து வசதிகளை அரச செலவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (து-4)

# மருந்துக் கலவையாளர் தெரிவு

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துக் கலவையாளர்கள் பறறாக்குறையை நீக்குமுகமாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரத் திணைகளத்தினால் 45பேர் மருந்துக் கலவையாளர்களாகத் தெரிவு செயயப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிறசி வகுப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாண பண்ணையில் உள்ள மார்பு நோய் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் 17 சாரதிகள் பற்றாக்குறையாக உள்ளனர் எனவும், இப்பற்றாக் குறையை நிவர்த்திசெய்ய புதிதாக 9 சாரதிகள் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களததினால் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

# வீட்டுத்தோட்ட வதிவிடக் கருத்தரங்கு

மகளிர் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் விவசாய திணைகளத்தால் திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் தொிவுசெய்யப்பட்ட 50 பெண்களுக்கு இரண்டு நாள் வதிவிட கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

வீட்டுத்தோட்டம் சம்பந்தமாக நடைபெறும் இப் பயிற்சி வகுப்பின் நிறைவில் வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள், விதைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் இதறகான ஏற்பாடுகளை புலோலிப் பகுதி விவசாய போதனாசிரியர் வி.பாலசுப்பிரமணியம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-36)

# வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கி ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம்

வலம்புரி பத்திரிகை மூலமும் ஏனைய தமிழ் தினசரிகள் மூலமும் பல அமைப்புக்கள் ஜனாதிபதித் தோதலைப் புறக்கணிக்க வேண்டும் என்பதற்கான ஆணித்தரமான, பலமான வலுவுள்ள காரணங்களை தமிழ் மககளது சிந்தனைக்கு முன்வைக் கப்பட்டுள்ளன. மேலும் பல அமைப்புக்கள வரும் நாட்களில் தமது நிலையை விளக்குவார்கள் என எதிர்பார்க்கலாம். ஒட்டு மொத்தமாக தமிழ்மக்கள் இத்தேர்தலைப் புறக்கணிக்க எடுத்த முடிவு சரியானது. அதில மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எம் மக்களது அரசியல் எழுச்சி, ஆக்கபூர்வமாக சகல நிலைகளிலும், உச்ச நிலையில் உள்ளது.

இவ்வேளையில் தேர்தலை முற்றாகப புறக்கணித்து வீட்டில் இருப்பதில் ஒரு பெரிய ஆபத்து உள்ளது. கடந்த காலங்களில அரச ஆதரவுக்குழுவினர் சகல தேர்தல் சட்டங்களையும் மீறி, கட்டுக் கட்டாக வாக்குச சீட்டுக்களை வாக்குப்பெட்டிக்குள் பகிரங்கமாகவே இட்டதை இங்கு ஞாபகப்படுதது வது பொருத்தமாக இருக்கும்.

வேட்பாளர்களது பிரதிநிதிகள் முன்னணியில், தேர்தல் அதிகாரி இருக்கத்தக்கதாக, சட்டமீறல் களைத் தடுக்க சகல அதிகாரங் களுடன் பொறுப்புடன் கடமைக்கு வடப்பட்ட பொலிஸார் கடமையில் இருக்க எல்லோர் முன்னணியிலும் கட்டுக்கட்டாக வாக்குச்சீட்டுக்கள் இடப்பட்டன.

தலைமை தேர்தல் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தருக்கு அன்று இரவு வாக்குச்சீட்டுக்கள் கணக்கெடுக்கப்படுவதற்கு முன்னர் ஆதாரத்துடன, இப்பாரிய தவறு சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் ஆட்சேபம் எடுபடவில்லை. இதே மாதிரியான நிகழ்வுகள் இம்முறையும் இடம்பெறாது என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை.

இம்முறை தமிழ் மக்களை சத்தேகக் கண்ணோடு பார்க்கும் சிங்களக் கட்சிகள் வடக்கு, கிழககில் அம்மாவட்டங்களைச் சார்ந்தவர்கள், வாக்களிப்பு நிலையங் களுக்குப் பொறுப்பாக நியமிக் கப்படக்கூடாது என கோரிக்கை விடுத்து, பேரினவாதத்தை இத தோதலிலும் அமுல் நடத்த கங் கணங்கட்டி, தேர்தல் ஆணையாளரை வலியுறுத்தியதை அடுத்து தேர்தல் ஆணையாளரும் அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளா.

இம்முறை வடக்கு கிழக்கில் வெளி மாவட்ட அதிகாரியே பொறுப்பாக இருக்க, தமிழ்க்கட்சிகள் போட்டியிடாத நிலையில தவறுகளைச் சுட்டிக்காட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கு இருக்காத நிலை சிலவேளை இரு பிரதான சிங்களக் கட்சிகள் சார்பாக சிங்களப் பிரதிநிதிகள் அங்கு இருக்க வாய்ப்பு உண்டு. அசம்பாவிதங்களைத் தடுக்க இலங்கை அரசும் பொலிஸாரும் காவல் கடமையில் நிற்க சற்றுத் தூரத்தில் இராணுவத்தினர் காணப்படுவர்.

இக்காட்சியைத்தான் வடககு கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும் காணக்கூடியதாக இருக்கப் போகிறது. தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகமாட்டார்கள்.ஒரு சில தமிழ் உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் இருப்பர். இவர்களுககு விசேட அதிகாரம் ஏதும் இல்லை. வாக்காளர்களுக்கான தேவைகளைக் கவனிப்பதும், விரலில் மைபூசுவதும் தான் இவர்கள் கடமை.

இச் சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாக அரச ஆதரவுக்குக குழுவினர் பயன்படுத்தி வாக்குச் சீட்டுக்களை தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் இருந்து பெற்றுவாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட மாடடார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஓரளவும் அதற்கு முன்னைய பாராளுமன்றத் தேர்தலில் தாராளமாகவும் தவறான முறையில் வாக்குச்சீட்டுப் பெட்டிகள் நிரப்பப்பட்டன. தேர்தல் கண்காணிப புக்குழுவினரை நிரந்தரமாக ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் நியமிக்கும் வாய்ப்பு இல்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லாமல் தேர்தலைப் புறககணிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதனை மக்கள் உணர வேண்டும் என்பதற்காகவே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தரப்பட்டன.

முழுமையாக பெரும் தொகையில் இப்படி வாக்குச் சீட்டுக்கள் போட மாட்டார்கள் என்று சிலர் கூறலாம். ஆனால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் திட்டமிட்டு ஒரு சில ஆயிரம் வாக்குச சீட்டுக்களை இட்டால் சிலவேளை இலட்சத்தைத தாண்டலாம். கடும் போட்டி நிலவும் இச் சந்தர்ப்பத்தில், தவறான வழியில் இடப்பட்ட வாக்குகள் ஒரு வேட்பாளரின் வெற்றியை நிர்ணயிக்கலாம்.

**திலீபன்**

தமிழ் மக்கள் வாக்களிக்கச் செல்லாமல புறக்கணித்தால், வாக்குச் சீட்டுக் கட்டு அப்படியே சீல் வைக்கப்பட்டு மாவட்டத் தேர்தல் காரியாலயத்துக்கு மீள அவ்வவ அதிகாரிகளால் கையளிக்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. இது காலம் கற்றுத்தந்த பாடம்.

இத்தகைய ஒரு சூழ்நிலை இருக்கும் போது சகலரும் களவாக எமது வாக்குச் சீட்டுக்களை தீய சக்திகள் தம் சார்பாக பயன்படுத்த முடியாதவாறு செய்ய சகல மக்களும் வாக்களிப்பு நிலைய்ம் சென்று தமது வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கி புறக்கணிப்பதா? இல்லை சகலரும் வாக்களிப்பு நிலையம் செல்லாமல் புறக்கணிப்பதா? எதனை வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் பின்பற்ற வேண்டும் என்பதனை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். இதுவே இன்றைய தமிழ் தேசியத்தின் தேவை.□

## முஸ்லிம்களுக்கு தனி அமைச்சு உருவாக்கப்படும் - ரணில்

தான் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டால் முஸ்லிம் விவகாரங் களுக்கான தனி அமைச்சு உருவாக் கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். முஸ்லிம்களின் பிரதிநிதிகளை கடந்த திங்கட்கிழமை சந்தித்த போதே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளில் இறுதித் தீவு எட்டப் படும்போது முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளும் நிறைவேற்றப்படும். இறுதித் தீர்வு நடைமுறைப்படுத்துவதற்கு முன் பாக பாதுகாப்புக்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். கிழக்குப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு கடுமையாக சீர்குலைந்துள்ளது. பொலிஸார் நிலைமையைக் கட்டுக் குள் கொண்டுவர வேண்டும் என்றார்.

ஆழிப்பேரலையால் பாதிக் கப்பட்ட முஸ்லிம்களுக்கான தமது செயற்திட்டத்தையும் இக்கூட் டத்தில் ரணில் விவரித்தார். (த)

## தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.கல்வி வலயத்தில் 436 மாணவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.கல்வி வயலத்தில் 436 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.வலயக கல்வி அலுவலகம் பகுப்பாய்வு அட்டவணை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

| | மா.மொ.தொகை | விண்ணப்பித்த மாணவர் தொகை | தோற்றிய மாணவர் தொகை | சித்தியடைந்தோர் | கொடுப்பனவுக்குத் தகுதி பெற்றோர் | சித்திபெற்றோர் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| யாழ்.கோட்டம | 1319 | 1167 | 1112 | 160 | 80 | 14.39 |
| நல்லூர் கோட்டம் | 1352 | 1226 | 1205 | 223 | 134 | 18.51 |
| கோப்பாய் கோட்டம | 1268 | 1061 | 969 | 53 | 41 | 5.47 |
| யாழ்.வலயம் | 3939 | 3454 | 3286 | 436 | 255 | 38.27 |

மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் விபரம்

| | 0-20 | 21-40 | 41-60 | 61-80 | 81-100 | 101-120 | 121-123 | 124-140 | 141-160 | 161-180 | 181-200 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்.கோட்டம | 34 | 115 | 217 | 194 | 200 | 169 | 23 | 99 | 53 | 08 | 00 | 1112 |
| நல்லூர் கோட்டம | 23 | 110 | 192 | 176 | 210 | 240 | 31 | 157 | 60 | 06 | 00 | 1205 |
| கோப்பாய் கோட்டம | 92 | 206 | 217 | 159 | 117 | 119 | 06 | 48 | 05 | 00 | 00 | 969 |
| யாழ்.வலயம் | 149 | 431 | 626 | 529 | 527 | 528 | 60 | 304 | 118 | 14 | 00 | 3286 |

இதேவேளை, யா.கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 4.53 வீதமானோர் 20ற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சூழல் விஞ்ஞானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் சூழல் விஞ்ஞான ஒரு வருட சான்றிதழ் கற்கை நெறிககு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மேற்படி கற்கை நெறி எதிர் வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெறவிருப்பதுடன் விரிவுரைகள் ஆங்கிலத் தில நடைபெறும்.

மேற்படி கற்கை நெறிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 10 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள். இக்கற்கை நெறிக்கு அடிப்படை தகைமையாக க.பொ.த்.சாதாரண தர பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும. மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்படிவங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழத்தின் யா.பிராந்திய அலுவலகத்தில் விநியோகிக்கப் பட்டு வருவதால் அவற்றை பெற்றுக்கொள்ளும் படி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய பொறுப்பதிகாரி ச.ஆ.ஞானேந்திரா கூறியுள்ளார். (அ-19)

## கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியில் நடைபெறவுள்ள தாகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-79)

## சட்ட உதவி ஆலோசனை மையம் தென்மராட்சியில் திறந்து வைக்கப்பட்டது









(சாவகச்சேரி)

அரசியல் அமைப்பு விவகார தேசிய நல்லிணக்க அமைச்சுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (UNDP) அனுசரணையுடன், 'நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருமபடம்" கடந்த திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக். பிரெட்டிக் அபேயரத்தின (திட்ட ஆய்வாளர் -UNDP) மங்கள விளக்கினை ஏற்றி நாடாவை வெட்டி கருமபீடத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக விவேகா சிறிவர்த்தன (திட்ட இணைப்பாளர் -UNDP), சாருக சமரசேகர (திட்ட இயக்குநர் UNDP), செ.சிறினிவாசன் (தென்மராட்சி பிரதேச செயலர்) ஆகியோர் கலந்து கொண் டனர். மற்றும் உதவி பிரதேச செயலர், சட்டத்தரணிகள், நிர்வாக உத்தியோகத்தர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிறுவனம் கிழக்கில் கல்முனை, அம்பாறை ஆகிய இடங்களிலும், வடக்கில் சாவகச்சேரியிலுமாக இலங்கையில் 13 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களை நீதி சென்றடையவேண்டும் - அதாவது நீதி அவர்களைநோக்கிச் செல்ல வேண்டும் - பாமரமக்களும் நீதியைப் பெற வேண்டும் என்ற நோக்கில ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலவச சட்ட உதவி ஆலோசனைகள் இங்கு வழங்கப்படும்.

1.கூடுதலான குடியியல் பங்கேற்பையும், சனநாயக வலுவூட்டலையும் பேணி வளர்ப்பதற்காக மனித உரிமைகளை மேம்படுத்தலும், பாதுகாத்தலும்;

2.நீதி நடப்பு முறையில் இருந்து பாரபட்சத்தை அகற்றுதல்;

3.சட்ட விழிப்பூட்டலை அதிகரித்தல்;

4.சட்ட உதவியை முன்னேற்றகரமாக வழங்குதல்;

மாற்று வழி, பிணக்கு, தீர்ப்பு வழிவகைகளை அறிமுகப்படுத்தலும் பலப்படுத்தலும் என்பன இக்கருத்திட்டத்தில் முக்கிய குறிக்கோள்களாகும்.

ஐ.நா.அ.திட்டம் 2000ஆம் ஆண்டில் இருந்து ஆளுமை நிறுவனங்களின் திறனைப் பலப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

நீதி முறைமையை அணுகுவதில் இருந்து மக்களைத் தடுப்பனவும், ஊக்குவிக்காதனவுமான மூலக் காரணிகளை ஆராய்வதற்காக ஐ.நா.அ.திட்டம் 2003இல் முக்கிய பங்கேற்பாளர்களை கொண்டமைந்த செயற்படுத்தற்குழு ஒன்றைத் தாபித்தது.

இவ்வாராய்வினை அடிப்படையாகக் கொண்டு, மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையைப் பிரயோகிப்பதன்மூலம் விசேடமாக வசதி குறைந்தவர்கள், பாதிப்படையக்கூடிய குழுவினர்கள் நீதியைச் சமமாக அணுகுவதை அதிகரிப்பதற்கும், கூட்டுவதற்குமான நோக்குடன் நீதியை சமமாக அணுகுவதற்கான முறை சாத்தியமுள்ள செயல் திட்டம் ஒன்றை அடையாளம் கொண்டுள்ளது. (து-108)

# இன்று ஒரு தகவல்

## துன்பமும் துணையும்

காசி தேசத்தில் ஒரு வேடன் இருந்தானாம். அவன் வழக்கம் போல காட்டுக்கு வேட்டையாடப் போனான். ஒரு மானுக்கு நேராகக் குறி பார்த்து அம்பை விட்டிருக்கிறான். குறி தவறிப் போய் அந்த அம்பு ஒரு மரத்தின் மேல் குத்திக் கொண்டது. விஷம் தடவிய அம்பு என்பதால் மரம் வீணாகி விட்டது. அதிலிருந்த இலை, காய் எல்லாம் உதிர ஆரம்பித்தது. கொஞ்சநாளில் அந்தமரம் முழுவதும் காய்ந்து பட்டுப் போய்விட்டது.

அந்த மரத்தில் ஒரு பொந்து இருந்தது. அதில் ஒரு கிளி நீண்டகாலமாக இருந்தது. அந்த மரம் நன்றாக வளத்துடன் இருந்த காலத்தில் நிறைய பறவைகள் அதில் தங்கியிருந்தன. மரம் காய ஆரம்பித்ததும் அந்தப் பறவைகள் எல்லாம் யோசிக்க ஆரம்பித்துவிட்டன. "சரி! இனி மேல் இந்த மரம் நமக்கு சரிப்பட்டு வராது! வேறு இடம்பார்க்க வேண்டியது தான்' என்று நினைத்து ஒவ்வொன்றாக பறந்து போக ஆரம்பித்துவிட்டது.

கடைசியில் தங்கியிருந்தது அந்தக் கிளிமட்டும் தான். அது அந்த மரத்தை விட்டு எங்கேயும் போகப் பிரியப்படவில்லை. ஏனென்றால் அதற்கு அந்த மரத்தின் மீது அவ்வளவு அன்பு. இரை தேடுவதற்குக் கூட அந்தக்கிளி வெளியே செல்வதில்லை. சாப்பிடாமல் இருந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்?கிளி மிகவும் வாடிவிட்டது. சத்தம் போட்டுக் கூட கத்த முடியவில்லை. அந்தக் கிளி இப்படி நடந்து கொள்வது தேவலோகத்திலிருந்த இந்திரனுக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நேரில் போய் அந்தக் கிளியைப் பார்க்க விரும்பினான். உடனே தேவலோகத்திலிருந்து புறப்பட்டு பூலோகத்திற்கு வந்து சேர்ந்தான் இந்திரன். ஒரு சாதாரண மனிதன் மாதிரி அந்த கிளிக்கு முன்பு போய் நின்றான்.

'ஏய்கிளியே! உனக்கென்ன பைத்தியமா? இந்த மரத்தில் இலையுமில்லை! காயுமில்லை! கிளைகள் காய்ந்து போய் எப்போது ஒடிந்து விழலாம் என்று நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. நீ இன்னமும் இதைக் கட்டி அழுது கொண்டிருக்கிறாயே உன்னுடன் இருந்த மற்ற பறவைகள் இதே காட்டில் உள்ள செழிப்பான மரங்களில் போய் கூடு கட்டி சுகமாக இருக்கின்றன. நீ மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்?' என்று கேட்டான் இந்திரன். கிளியை சோதிப்பதற்காக அப்படிக் கேட்டான்.

அந்தக் கிளிக்கு தவவலிமை அதிகம். அதனால் வந்திருப்பது இந்திரன் தான் என்பது அதற்குப் புரிந்துவிட்டது. 'தேவேந்திரா! நான் இந்த மரத்தில்தான் பிறந்தேன்' சிறு வயதிலிருந்து என்னை வளர்த்து ஆளாக்கியது இந்த மரம்தான். எனக்கு பசி எடுத்த போது பழம் கொடுத்தது இந்த மரம் தான். எனக்கு ஆபத்து வந்தபோது அடைக்கலம் கொடுத்தது இந்த மரம் தான். இப்போது இந்த மரம் கஷ்டத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் நான் மட்டும் நன்றாக இருந்தால் போதுமென்று நினைக்கலாமா? அது சுயநலம் அல்லவா? இது துன்பப்படும் காலத்தில் நானும் இதனுடன் கூட இருந்து துன்பத்தைச் சகித்துக்கொள்வதுதான் நியாயம். உதவி செய்தவர்களை உதறித்தள்ளுவது நல்லதில்லை என்பது உங்களுக்கே தெரியும். எனது நல்ல விரதத்தைக் குலைப்பது போலல்லவா இது இருக்கிறது. தேவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கக்கூடிய நிலையில் இருக்கும் நீங்கள் எனக்கு இப்படி உபதேசம் செய்யலாமா?' என்று கேட்டது கிளி.

இந்திரனுக்கு மிக்க மகிழ்ச்சி இதைக் கேட்டதும். "கிளியே! நண்பர்கள் என்றால் உன்னை மாதிரித் தான் இருக்க வேண்டும். பொதுவாக ஒருவர் நன்றாக இருக்கும் போது அவரைச் சுற்றி நிறையப் பேர் இருப்பார்கள். அவர் கஷ்டப்படும்போது அத்தனைபேரும் ஓடிப்போய் விடுவார்கள். நீ அப்படி இல்லை! சுகத்தையும் துக்கத்தையும் சரி சமமாக எடுத்துக் கொண்டாய். உன்னைப் பாராட்டுகிறேன்! உனக்கு விருப்பமான வரம் ஏதாவது கேள் தருகிறேன்'' என்றார்.

கிளி என்ன வரம் கேட்டது தெரியுமா? "இந்த மரம் மீண்டும் முன்பு இருந்தது போலவே இலை, பூ, கனிகளோடு செழிப்பாக இருக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டது. "அப்படியே தந்தேன்" என்றார் இந்திரன். அடுத்த விநாடியே மரம் முன்பிருந்ததை விட செழிப்பாக பூத்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டது. அந்தக் கிளியும் நீண்டநாள் சந்தோஷமாக வாழ்ந்து இந்திரலோகம் போய்ச் சேர்ந்தது.

மகாபாரதத்தில் பீஷ்மர் தருமருக்கு இந்தக் கதையைச் சொல்கிறார். "மற்றவர்கள் துன்பப்படும் போது எவன் பரிவு கொள்கிறானோ அவன் மேன்மையடைவது நிச்சயம்'' என்றும் அவர் சொன்னார். சரி... அந்தக் கதையை இந்த சமயத்தில் இன்று ஒரு தகவலில் ஏன் தரவேண்டும் என்று நினைக்கிறீர்களா? வயதான காலத்தில் அம்மா, அப்பாவை கவனிக்காத பிள்ளைகளின் காதில் இது விழட்டும் என்பதற்காகத் தான். மற்றவர்கள் பரிவு காட்டினால் எந்த அளவுக்கு மேன்மை என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

ஒரு வயதான அம்மா தன் பிள்ளையை மிகவும் புகழ்ந்தார். "என் பிள்ளை மிகவும் புத்திசாலித்தனமாகக் குடும்பம் நடத்துகிறான். அவன் மனைவி கோவித்துக்கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகும் அளவுக்கு அவன் நடந்து கொண்டதே இல்லை'' என்றார். "அப்படியா?'' என்று கேட்டேன் மிகவும் ஆச்சரியமாக. 'ஆமாம்! ஏனென்றால் இவனே அவர்களுடைய வீட்டுக்குப் போய் வீட்டோடு மாப்பிள்ளையாகத் தங்கிவிட்டான் என்றார். இவனெல்லாம் எந்தக் காலத்தில் சார் அப்பா, அம்மாவைக் காப்பாற்றுவது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அதிகாரப் பகிர்வுக்கே மக்கள் ஆதரவு ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரத்தினை பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதே பெரும்பான்மையான மக்களின் கருத்து என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலைப்பாட்டிற்கு பாதிப்பினை ஏற்படுத்த ஜே.வி.பி போன்ற அடிப்படைவாதக் கட்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எம்முடன் உள்ள ஏனைய கட்சிகளை நீக்கிப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த நாட்டில் 74 வீதமான வாக்குகளை கடந்த தேர்தலில் பெற்றுள்ளன.

அவ்வாறெனில் 70முதல் 80 வீதமானவர்களின் விருப்பத்தின்படி எம்மால் தீர்வொன்றுக்கு வரமுடியுமானால் அது பதினொரு வருடகாலத்தில் பாரிய வெற்றியாகும்.

நாட்டுமக்களில் பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்ட பிரதான அரசியல் கட்சிகளும் எம்முடன் உள்ள. ஏனைய 9 கட்சிகளும் ஏற்றுக்கொண்ட தீர்வுத் திட்டமொன்று உள்ளது.

இன்று ஒரு கட்சி மட்டும் இன்னும் சிறிய இரண்டு கட்சிகளை இணைத்துக்கொண்டு ஏதோ உறுமய என்ற வகையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றது.

எல்லா நாடுகளிலும் சில அடிப்படைவாதிகள் உள்ளனர். இனவாதிகள் உள்ளனர். இவர்களே நாட்டை வீணாக்குகின்றனர். எமது நாட்டிலும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவர்கள் உள்ளனர். ஆனால் இவர்களுக்கு ஏற்ற வகையில் நாட்டை அங்கும், இங்கும் நகர்த்தமுடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இன்று பாரிய தூரத்தினை கடந்து வந்து அரைவாசித் தூரத்தில் நின்று கொண்டு இது குறித்து ஆராயத் தயாராகவுள்ளனர்.

ஈழத்தைக் கோராமல், நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தாமல் தீர்வுகாண ஒஸ்லோ உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்நாட்டு சிறுபான்மையின மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்காக அரசியல் அமைப்பை மாற்றவேண்டிய பாரிய தேவை ஒன்றை நான் கொண்டிருந்தேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (து-4)

# எதிர்காலத்தைச் சுபீட்சமாக்க திடசங்கற்பம் எடுத்துள்ளதாக பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இளைய சமுதாயத்தை சிறந்த பண்புகளைக் கொண்டதாக மாற்றி எதிர்காலத்தைச் சுபீட்சமாக்க திடசங்கற்பம் பூண்டிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த இளைய தலைமுறையினரின் கௌரவத்தை சீர்குலைப்பதற்கு எந்த ஒரு சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லையென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் ஊவா பரணகம பிரதேசத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மனித குலம் பிள்ளைப் பேற்றினைச் சிறந்த பேறாகக் கருதுகிறது. ஆனால் ஒரு சிலர் பிளைகளை வர்த்தகப் பண்டமாக மாற்றியிருக்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

எதிர்கால்தில் ஆரோக்கியமான சந்ததியை உருவாக்கும் வகையில் விளையாட்டு, உடற்கல்வி ஆகியவற்றை மேம்படுத்தும் தேசியதிட்டத்தை உருவாக்கப்போவதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

பகையாளியைக் கேலி செய்யாமல் வாழ்க்கையின் அனைத்துச் சவால்களையும் எதிர் கொள்வதே தமது கொள்கையாகும்.

ஒரு விளையாட்டு வீரர் என்ற வகையிலேயே அந்த உறுதி கிடைத்ததாக ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் உரை நிகழ்த்தினார்கள். (அ-7)

# ஈரானிலிருந்து பாதுகாப்பு உபகரணங்கள் பெற முடிவு

(கொழும்பு)

முப்படையினருக்குமுரிய பாதுகாப்புடன் தொடர்புடைய உபகரணங்களை சலுகை அடிப்படையில் ஈரானிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக்கு இது தொடர்பான ஆலோசனையை சமர்ப்பித்த போதே அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

ஈரான் -இலங்கைக்கிடையிலான ஒப்பந்தத்தின்படி சலுகை அடிப்படையில் உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி அண்மையில் ஈரானுக்கு விஜயம் செய்திருந்த போது இதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-7)

# குண்டுத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் அங்கிகள் கொள்ளுப்பிட்டியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் அங்கிகள் கொண்ட தொகுதியை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி காலிவீதி 13ஆவது ஒழுங்கைக் கருகில் அநாதரவாகக்கிடந்த பொதி ஒன்றிலிருந்து இந்த அங்கிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசர பொலிஸ் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தொலைபேசித் தகவல் ஒன்றையடுத்தே இது கைப்பற்றப்பட்டதாக கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைப்பற்றப்பட்ட அங்கிகளைக் கொண்ட தொகுதி குண்டு செயலிழக்கும் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் புலன் விசாரணைகள் தொடர்கின்றது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-7)

# வல்வெட்டித்துறை சந்தைக்கு நிரந்தர கட்டடம் அமைக்கக் கோரிக்கை

வல்வெட்டித்துறை மரக்கறிச் சந்தை தற்காலிகமாக இயங்கி வரும் நவீன கடைத் தொகுதிக் கட்டடம் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதனால் தற்காலிகமாக இயங்கிவரும் மரக்கறிச் சந்தை போதிய இடவசதிகளின்றியும் பொருட்களைப் பாதுகாப்பதற்கான களஞ்சிய வசதிகளின்றியும் நுகர்வோரும் விற்பனையாளரும் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

கடைத்தொகுதி புனரமைக்கப்பட்டு கையளிக்கப்படும் பட்சத்தில் தற்போது இயங்கிவரும் மரக்கறிச் சந்தையை இடம்மாற்ற வேண்டிவரும். இதற்கான நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தரவேண்டுமென விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இச் சந்தை தற்காலிகமாகவே இவ்விடத்தில் இயங்கி வருகிறது. (அ-32)

# முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்த விசேட குழு நியமிக்கப்படும்-ரணில்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சிகளில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தவரின் கல்வியை மேம்படுத்துவதற்கு முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சின் பொறுப்பில் விசேட குழுவை நியமிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் காலி முகத்திடல் ஹோட்டலில் நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றிய போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

கல்முனையை பாரிய நகராக அபிவிருத்தி செய்வதற்குநடவடிக்கை எடுக்கப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பிரதேச முஸ்லிம்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென எதிர் கட்சித் தலைவர் உறுதியளித்தார். (அ-7)

# சேவா லங்கா நிறுவனம் விவசாயிகளுக்கு நிதியுதவி

(வல்வெட்டித்துறை)

சுனாமி நிவாரணத்திட்டத்தின் கீழ் கெருடாவில் வடக்கு கமக்காரர் அமைப்பினூடாக 80 பயனாளிகளுக்கு 70% மானியமாகவும் 30% கடனாகவும் உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளது. பயனாளிகளை தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் 20 சுய தொழில் உற்பத்தியாளர்களுக்கும் 60 விவசாயிகளுக்கும் உள்ளீடுகளை வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நிதியினை சேவா லங்கா நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. இந்த நிறுவனத்தினர் கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 6 விவசாயக் கிணறுகளை புனரமைக்க நிதியுதவி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-32)

# நெற் செய்கை பாதிப்பு

(வல்வெட்டித்துறை)

கடந்த சில நாட்களாகத் தொடரும் பெரு மழையால் இம்முறை பெரும்போக நெற்செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

விதைப்புக் காலம் தொட்டு பெய்துவரும் மழையால் முளைதள்ளிய நெற்கதிர்கள் குருத்துக் கக்கும் நிலையில் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வடமராட்சியின் பல இடங்களிலும் இம் முறை அதிகளவு விதைப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-32)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005


## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

சமூகக்கல்வியும் வரலாறும்

நேரம் : 3 மணித்தியாலம் **பகுதி -II**

ஆசிரியர் : N.Sசங்கர்B.A.(Hons)Geog.
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(தேசிய பாடசாலை).

* முதலாம் வினாவின் (அ), (ஆ) பிரிவுகளுக்கும் வேறு ஐந்து வினாக் களுக்கும் விடை எழுதுக.




1:50000

01. (அ)தரப்பட்டுள்ள 1:50000 தேசப்பட மாதிரியினை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

(i)படத்தில் ①, ②, ③, ④, ⑤, ⑥ எனக் காட்டப்பட்டுள்ள இடங்களில் காணப்படும் அம்சங்கள் யாவை என்பதைக் கீழே தரப்பட்டுள்ளவற்றில் இருந்து தெரிவுசெய்து எழுதுக. (06 புள்ளிகள் )

① - புகையிரத நிலையம்/ புகையிரதக் கடவை/ புகையிரதத் தரிப்பு
② - கற்பாறைத்தொடர்/ சிறுகுன்று/ மணல்மேடு
③ - ஹோட்டல்/ வாடிவீடு/ வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடம்
④ - வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடம்/ திரிகோணகணித நிலையம்/ அமைக்கப்பட்ட பிரதேசம்
⑤ - சிறுவீதி/ நடைபாதை/ மாவட்ட எல்லை
⑥ - மாகாண எல்லை/ மாவட்ட எல்லை/ பிதேசச் செயலர் பிரிவு எல்லை

(ii) பிரதான சந்திக் குடியிருப்பிற் காணக்கூடிய
(a) இரண்டு வகை சமய வழிபாட்டிடங்கள்
(b) இரண்டு வகைப் பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றை எழுதுக. (04 புள்ளிகள் )

(iii) (a) இப்பிரதேசத்திலுள்ள நீர்ப்பானசக்குளத்தின் அணைக்கட்டின் உயரத்தினை அண்ணளவாக மீற்றர்களிற் குறிப்பிடுக.
(b)நீரப்பாசனக்குளத்தின் பரப்பளவினை அண்ணளவாகச் சதுரக் கிலோமீற்றர்களிற் கணிப்பிடுக.
(c)இப்பரதேசத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள சாய்வான நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகை எது?
(d)இப்பிரதேசத்தின் தென்கிழ்க்காற்பகுதியில் P என்ற எழுத்தினாற் காட்டப்பட்டுள்ள மலையுச்சியின் சரியான உயரம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(245m, 207m, 314m, 121m)
(e)படத்தன் கிழ்க்காட்டப்பட்டுள்ள நேர்கோட்டளவுத் திட்டத்தினை பூரணப்படுத்துக. (05 புள்ளிகள் )

(iv) (a) Q-R புள்ளிகளுக்கிடையிலான நிலத்தின் சாய்வு எவ்வகையானது?
(b)இப்பிரதேசத்திற்கூடாகச் செல்லும் பிரதான வீதிகள் அனைத்தினதும் மொத்த நீளத்தினைக் கிலோமீற்றர்களிற் கணிப்பிடுக.
(c)படத்திற் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தின் பரப்பளவினைச் சதுரக் கிலோமீற்றர்களிற் கணிப்பிடுக. (03 புள்ளிகள் )

(மொத்தம் 18 புள்ளிகள் )

01. (ஆ) (i)இங்கு A,B,C,D ஆகியவற்றால் குறிப்பிடப்படும் விடயங்களுக்குப் பொருத்தமான விடையினைத் தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிவுசெய்து எழுதுக.


A - புராதன கண்டி இராச்சியத்தில் கிராமத் தலைவனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயர்.
B - நிற்கும் நிலைப் புத்தர்சிலை காணப்படும் இடங்களில் ஒன்று.
C - புராதன இலங்கையினை ஆட்சிசெய்த அரசர்களில் "சாரார்த்த சங்கிரய" என்ற மருத்துவத்துறை நூலை எழுதியும், பத்துக் கிராமங்களுக்கு ஒருவர் என்ற விகிதத் தில் வைத்தியர்களை நியமித்தும் சேவையாற்றிய அரசன்.
D - மணமகளை மணமகன் வீட்டிற்குக் கூட்டிச் சென்று வாழ்வதைக் குறிப்பது.

(தாதுசேனன், புத்ததாசன், பின்ன, கமிக, தொழுவிலை, அவுக்கண, திக)

A - ..........................................
B - ..........................................
C - ..........................................
D - ..........................................

(04 புள்ளிகள் )

(ii) இலங்கைப் படத்தில் 1, 2, 3, 4 எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இரு நிலையங்களையும், நதிகளையும் பட்டியலில் இருந்து தெரிவு செய்க.




(மகாகமம், மகியங்கனை, ஜம்புகோளப் பட்டினம், கல்லோயா, கிரிந்தி ஓயா, கோணநதி, கதம்பநதி).

சேலம் பெரியார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மருமகள் மஞ்சுளா. அமெரிக்காவில் வேலை பார்க்கும் துணைவேந்தரின் மகன் ராஜவேலுவுக்கும் மஞ்சுளாவுக்கும் பிரமாண்டமான முறையில் திருமணம் நடந்தது. மஞ்சுளாவை அமெரிக்வுக்கு அழைத்துச்செல்வதாகக் கூறித் திருமணம் செய்தவர் பின்னர் அழைத்துச் செல்லாததால் வெடித்தது பிரச்சினை. பின் நீதிமன்றத்தில் சந்திப்பு; ஆனால் இன்னும் தீராமல் தொடர்கிறது விவகாரம். உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது வழக்கு.

பத்துக்கு எட்டு வழக்கறிஞர்களிடம் இப்பொழுது வெளிநாட்டு மாப்பிள்ளைகள் வழக்கு கைவசமிருப்பது உண்மை. திருமணமாகி வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள் குடும்பப் பிரச்சினைகளால் ஒருசில மாதங்களில் தாயகம் திரும்புவது அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம். சாதாரண பெண்கள் மட்டுமல்ல பிரபல நடிகைகளும் இதில் அடக்கம். பெரும்பாலும் ஆடம்பர ஆசையால்தான் இத்தகைய மண வாழ்க்கை தோல்வியில் முடிவடைகின்றன.

வெளிநாட்டு மாப்பிள்ளைகளிடம் சட்டரீதியாக விவாகரத்துப் பெறுவதிலும் ஜீவனாம்சம் கேட்பதிலும் நடைமுறைச்சிக்கல்கள் ஏராளம். சரியான முகவரி கிடைக்காதது, தேவையான ஆவணங்களைப்பெறமுடியாதது எனப்பல நடைமுறைச்சிக்கல். இப்படி விவாகரத்துக் கிடைக்காமல், வாழ்க்கையில் வேறு முடிவு எடுக்க முடியாமல் பாதிக்கப்பட்ட பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதாகக் கூறுகின்றனர் சட்ட நிபுணர்கள்.

வெளிநாட்டு மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுக்கும்போது அவசரப்படாமல் முடிவெடுப்பதும் கலாசார மாற்றத்திற்கு ஏற்ப பெண்கள் மாறுவதும் கட்டாய தேவை என்கின்றனர் ஆலோசகர்கள். திருமணத்தின் போதே முறையான சட்டவிதி முறைகளைப் பின்பற்றினால் எதிர்காலத்தில் பிரச்சினை ஏற்பட்டால் கூட எளிதான தீர்வுக்கு வழிவகுக்கும் என்பது நிபுணர்களின் கருத்து.

வெளிநாட்டிலிருக்கும் மாப்பிள்ளைகளைத் திருமணம் செய்து கெள்ளும் எல்லாப் பெண்களும் பாதிக்கப்பட்டு விவாகரத்தை நாடுவதில்லை. வெளிநாடுகளில் மணம் முடித்துக்கொண்ட பலரும் வளமோடும், நலமோடும் வாழ்வதை மறுக்கமுடியாது. மொத்தத்தில் மணமகனைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் ஒன்றுக்குப் பலமுறை விசாரித்து, ஒத்துப்போக முடியுமென்றால் மட்டுமே வெளிநாட்டிலிருக்கும் பையனுக்கு பெண்களைக் கொடுக்கவேண்டும்.

வெளிநாடு என்றவுடன் வேறெதையும் யோசியாது வாயைப் பிளந்தபடி திருமண பந்தத்தில் மகளைத் தள்ளினால் உண்மை வெளியாகும் போது அப் பெண்ணின் வாழ்க்கையும் சீரழிந்து விடும் என்பதைப் பெண்ணைப் பெற்றவர்கள் யோசிக்க வேண்டும். 'கரையடுத்த நீர் இருக்கக் கானலை நாடிடும் மானினம் போல்' உள்ளூரிலேயே இருக்கும் படித்த பண்பான இளைஞர்களை விடுத்து வெளிநாட்டு மாப்பிள்ளைகளை நாடினால் ஏற்படும் பின் விளைவுகளை அனுபவித்துத்தான் தீர வேண்டும். □

தொகுப்பு
பொ.இராசதுரை

## ஐ.தே.கட்சியின் முன்னாள் எம்.பி மீண்டும் தீவிர அரசியலில் இறங்கினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மூத்த தலைவர்களில் ஒருவருமான ஏ.எம்.எஸ்.அதிகாரி மீண்டும் தீவிர அரசியலில் இறங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் கலவானவில் உள்ள தனது இல்லத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

நாட்டின் எதிர்காலத்தைத் தாங்குகிற பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் உள்ளது. அதனால் கடந்தகால வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் ரணிலின் வெற்றிக்காகப் பாடுபடுவோம். என்னை மீண்டும் அரசியலில் ஈடுபடுமாறு சிறிசேன கூரேயும், மிலிந்த மொறகொடவும் வலியுறுத்தினர். வடமத்திய தேர்தல் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நான் கிராமந்தோறும் சென்று ரணிலுக்காக பிரசாரம் செய்ய உள்ளேன்.

முன்னைய தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தன, பிரேமதாச ஆகியோர் வெற்றிபெறுவதற்கு நான் பாடுபட்டேன். காமினி திசநாயக்க கொல்லப்படாது இருந்திருந்தால் அவரையும் வெற்றி பெற வைத்திருப்பேன். ரணிலின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவரது சுதந்திரக் கட்சியிலேயே பிரச்சினை உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவினால்தான் இன்னொரு யுத்தத்தை தவிர்க்கமுடியும் என அதிகாரி மேலும் தெரிவித்தார். (து-4)

## திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருவருட சான்றிதழ் கற்கை நெறிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டு வருவதால் மேற்படி கற்கை நெறியை தொடர விரும்புபவர்கள் உடனடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும்படி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய பொறுப்பதிகாரி ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

இக் கற்கைநெறிக்கு க.பொ.த. சாதாரணதரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும். மேற்படி கற்கைநெறி எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்க்ளில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளதுடன் விரிவுரைகள் தமிழில் நடைபெறும். மேற்படி கற்கை நெறிக்கு 100பேர் உள்ளடக்கப்படவுள்ளனர்.

இவ் ஒருவருட சான்றிதழ் முன்பள்ளி கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்து முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியைத் தொடரமுடியும். (அ-19)


## சாவகச்சேரி நகரசபை

01.01.2006 முதல் 31.12.2006 வரை
குத்தகைகள், சேவைக்கான

# கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி:- 25.11.2005 காலை 12.00 மணி
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 01.12.2005 காலை 10.00மணி
3. கேள்வி திறக்கப்படும் திகதி:- 01.12.2005 காலை 11.00மணி

| இல, | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கமுடியாதது |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தைக் குத்தகை | 12,10,000.00 | 5,000.00 | 200.00 |
| 02 | சாவகச்சேரி மீன் சந்தைக் குத்தகை | 193,600.00 | 1,000.00 | 200.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை NMS I | 132,000.00 | 1,000.00 | 200.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை NMS II | 132,000.00 | 1,000.00 | 200.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை NMS III | 198,000.00 | 1,000.00 | 200.00 |
| 06 | மாட்டிறைச்சிக் கடை NMS IV | 198,000.00 | 1,000.00 | 200.00 |
| 07 | துவிச்சக்கரவண்டித் தரிப்பிடக் குத்தகை | 55,000.00 | 1,000.00 | 200.00 |
| 08 | காலைக் குத்தகை | 22,000,00 | 1,000.00 | 200.00 |

*குறிப்பு:-*

* இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விடுவிக்கப்படும் மாத வாடகைகளை செலுத்த வேண்டும்.
* கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 15% பெறுமதி சேர்வரி மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
* கேள்விப் படிவங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டை கொண்டுவர வேண்டும்.
* மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
* போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*07.11.2005*

*திருமதி கு. ஆறுமுகம்,*
*செயலாளர், நகரசபை,*
*சாவகச்சேரி.*

(C/1824)


# சச்சின் 39

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

எத்தனை பலமான எதிரணியாக இருந்த போதும் அவர்களின் பந்து வீச்சாளர்களை துவக்கம் முதலே அடித்து விளையாடி ஆதிக்கம் செலுத்துவதுதான் சச்சினின் மிகப் பெரிய பலம் ஆனால் சச்சின் கேப்டனாக ஆன பிறகு இதைச் செய்யத் தயங்குகிறார். தான் ஒரு சிறிய தவறு செய்து அதன் மூலம் ஆட்டம் இழந்துவிட்டால் மற்ற வீரர்கள் சரியாக விளையாடுவார்களோ மாட்டார்களோ என்கிற கவலை அவர் உள்ளத்தை ஆக்கிரமிக்க ஒரு சாதாரணமான பந்தைக் கூட முன்பு போல தாக்கி விளையாடுவதா அல்லது தடுத்து ஆடு வதா என்று முடிவு எடுக்க முடியாமல் திணறுகிறார் . சச்சினின் அந்த விநாடிநேரக் குழப்பத்தை எதிரணி பவுலர்கள் சாமர்த்தியமாக உபயோகித்துக்கொண்டு விடுகிறார்கள். கிக்கெற் வல்லுநர்களின் இந்தக் கருத்தை சச்சின் ஒப்புக்கொள்ளவில்லை. கேப்டன் பொறுப்பினால் என்னுடைய பேட்டிங் பாதிக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஆனால் என்னுடைய கவலைகள் அதிகரித்தன. என் தேசத்துக்காக அணிக்காக பல தூக்கமில்லாத இரவுகளைக் கழிக்க நேர்ந்தது. என்னுடைய ஆட்டத்தைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமே கிடைக்கவில்லை. குடும்பத்துடன் செலவழிக்கிற நேரங்களில் கூட நான் இந்திய அணியைப் பற்றியும் அடுத்த போட்டியைப் பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்க நேர்ந்தது. பல கனவுகளோடும் ஆசைகளோடும் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன்பொறுப்பை ஏற்றுக்கொண்ட சச்சின், அவற்றில் ஒரு சிறு சதவீதத்தைக் கூட நிறைவேற்ற முடியாதவராக அந்தப் பதவியை இழக்க நேர்ந்தது. அவருக்கும் இதில் வருத்தம் உண்டு. என்றாலும், அதன்பிறகு முன்பைவிட சுதந்திரமாக உணர்ந்த சச்சின் தனது பழைய பாணியில் மீண்டும் விளையாடலானார். கிரிக்கெற் வாரியத்தினர் அணியின் உதவி கேப்டன் பதவியை அவருக்கு வழங்க முன் வந்தபோது உறுதியாக மறுத்து விட்டார்.



## 16. பொற்காலம்

கேப்டன் பதவியைத் துறந்தது சச்சினுக்கு நன்மையாகவே முடிந்தது. மீண்டும் அவர் தன்னுடைய ஆட்டத் திறமையை மட்டும் நம்பி விளையாடுகிற நாள்கள் வந்தன. தோளில் உறுத்திக் கொண்டிருந்த சுமை இறங்கிய பின் ஒரு வழிப்போக்கன் துள்ளலோடும், சுதந்திர உணர்வோடும் தன்னுடைய பயணத்தைத் தொடர்வது போல 1998ஆம் வருடம் சச்சின் என்கிற ஒரு தனிமனிதரால் அந்த ஆண்டு இந்திய கிரிக்கெட்டின் பொற்காலமாக ஆனது! சச்சினின் உற்சாகத் திருவிழாக்கள் துவங்கியது 1998ஜனவரி பத்தாம் தேதி, டாக்காவில் நடைபெற்ற பங்களா தேஷ் சுதந்திரக் கோப்பை போட்டிகளில்தான். இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது. ஐந்து போட்டிகளில் 258 ரன்கள் எடுத்த சச்சின் தொடர் நாயகனாகத் தேர்வு பெற்றார். அடுத்து ஆஸ் திரேலியாவை டெஸ்ட் ஆட்டங்களில் சந்தித்தது இந்திய அணி. சச்சினைப் பொறுத்தவரை ஆஸ்திரேலிய அணியுடன் ஒரு கணக்கு மீதமிருந்தது. 1992ல் பத்தொன்பது வயதுச் சிறுவனாக ஆஸ்திரேலியாவில் விளையாடச் சென்ற போது, இந்திய அணி ஐந்து டெஸ்ட் போட்டிகளில் நான்கில் தோல்வி அடைந்தது. அவருடைய நினைவுகளில் அழியாமல் நிலைத்திருந்தது. அந்த காயங்களுக்கு இப்போது இங்கே பழி தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்திருந்தார் அவர். இதற்கான வாய்ப்பு டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பாகவே சச்சினுக்குக் கிடைத்தது. மும்பை ரஞ்சி அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான பயிற்சிப் போட்டியில் சச்சின் மும்பை அணிக்குத் தலைமையேற்று ஆடினார். பதினைந்து வயதிலிந்து முதல் தர கிரிக்கெட் விளையாடுகிற சச்சின் அந்த ஆட்டத்தில் தான் தனது முதல் இரட்டை சதத்தை எடுத்தார். போட்டியில் மும்பை அணி வெற்றி பெற்றது! இந்திய -ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் துவங்கியது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் சச்சின் சோபிக்க வில்லை. என்றாலும் இரண்டாவது இன்னிங்ஸில் 155 ரன்கள் குவித்து இந்தியாவின் வெற்றிக்குக் காரணமானார் சச்சின்! அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடிய சச்சின் பெங்களூரில் 177 ரன்கள் எடுத்தார். மூன்று போட்டிகளில் மொத்தம் 446 ரன்கள் குவித்த சச்சின் தொடர்நாயகர் விருது பெற்றார். ஆஸ்திரேலியாவை டெஸ்ட் தொடரில் வென்ற பின்னர் இந்தியா- ஆஸ்திரேலியா- ஜிம்பாவே அணிகள் பெப்ஸி கோப்பைக்காக மோதின. லீக் போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்றது இந்திய அணி. குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு ஆட்டங்களிலும் சச்சினின் ஆட்டம் அபாரமாக இருந்தது. ஒன்றில் சதம். இன்னொன்றில் ஐந்து விக் கெட்டுகள் -இரண்டிலும் ஆட்ட நாயகர் விருது சச்சினுக்கே! ஆனால் டெல்லியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியாவை வென்று கோப்பையைக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா. 'பெப்ஸி கோப்பை' போட்டிகள் முடிவடைந்த உடனேயே இந்திய அணி ஷார்ஜாவுக்குப் பயணமானது. அங்கே இந்தியா- ஆஸ்திரேலியா -நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான கொகோ கோலா கோப்பை போட்டிகள் துவங்கின. ஷார்ஜாவில் சச்சினுக்கு இரண்டு முக்கியக் கடமைகள் காத்திருந்தன. முதலாவதாக 1997 டிசம்பரில் 'அகாய் -சிங்கர் கோப்பை' போட்டிகளின் போது இந்திய அணியை அவமதிக்கும் விதமாக நடந்துகொண்ட ஷார்ஜா ரசிகளுக்கு தங்களின் நிஜமான திறமையைக் காட்டிப் பதிலடி கொடுக்க வேண்டும். அடுத்ததாக பெப்ஸி கோப்பையில் ஆஸ்திரேலியாவிடம் விட்டதை இந்த கொகோ கோலா கோப்பையில் பிடித்தாகவேண்டும். இந்த இரண்டும் நடக்க வேண்டுமானால் சச்சின் நன்றாக விளையாடவேண்டும்! இந்தியாவுக்கு கொகோலா கோப்பையை வென்று தரவேண்டும் என்கிற நிச்சயமான முடிவோடுதான் ஷார்ஜாவில் வந்து இறங்கினேன் நான் என்று போட்டிக்குப் பின் சச்சின் குறிப்பிட்டார்.



(தொடரும்)

## தேர்தல் தினத்தன்று சரக்கு வாகனம் ஓமந்தையூடாகச் செல்லத் தடை

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புத்தினமான எதிர்வரும் 17ஆம் திகதி ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய இராணுவச் சோதனைச் சாவடிகளின் ஊடாக சரக்குகளை ஏற்றுச்செல்லும் வாகனங்களின் போக்குவரத்து நிறுத்தப்படவுள்ளது.

அத்துடன் வாக்காளர்களை விசேடமாக தனியான வரிசையில் அனுமதிப்பது என வன்னித் தேர்தல் மாவட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் வவுனியா செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்த வவுனியா அரச அதிபர் சி. சண்முகம் இத்தகவலைத் தெரிவித்தார். வாக்களிப்புத் தினத்தன்று சரக்குகளை ஏற்றிச்செல்லும் வாகனப் போக்குவரத்து நடைபெறாத போதிலும் பயணிகளின போக்குவரத்து வழமைபோல நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வரும் வாக்காளர்கள் ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய இராணுவச் சோதனைச் சாவடிகள் வரை வருவதாற்கான இலவச வாகனப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது என்றும், அங்கிருந்து வாக்குச்சாவடிகள் வரையில் வேறு வாகனப் போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்வது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்கள் உட்பட அனைத்துத் தேர்தல் நடவடிக்கைகளின் பாதுகாப்பிற்கு பொலிஸாரே பொறுப்பாக இருந்து செயற்படவேண்டுமென்றும் இராணுவத்தினர் பொலிஸாருக்கு உதவியாக இருப்பார்கள் என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(4)

## ஒற்றையாட்சி, சமஷ்டி என்ற சொற்களை அரசியல் யாப்பிலிருந்து நீக்க வேண்டும்

(கொழும்பு)

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாராப் பரவலாக்கத்தை சகல குழுக்களும் அங்கீகரித்திருப்பதாக கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப்பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சுபாரதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான விடயங்கள் சர்வதேச சமூகத்தினரால் மாத்திரமன்றி நாட்டு மக்களும் அங்கீகரிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள தற்போதைய பிரச்சினைக்கு கலாசார மற்றும் சமய வேறுபாடுகளுக்கிடையேயான பரஸ்பர புரிந்துணர்வுக் குறையே காரணம் என்று தெரிவித்தார்.

எதிர்கால அரசியல் யாப்பிலிருந்து ஒற்றையாட்சி,சமஷ்டி ஆகிய சொற்கள் நீக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவ அமைப்பு அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## ஜனாதிபதித் தேர்தலில் விருப்பத் தெரிவு

(கொழும்பு)

நவம்பர் 17ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிக்கவேண்டும் என்பது பற்றி தேர்தல் ஆணையாளர் விளக்கமளித்துள்ளார்.

இம்முறை இத்தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். எனவே 2ஆவது,3ஆவது விருப்பத் தெரிவுகளையும் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு வாக்காளர்களுக்கு கிடைத்துள்ளது.

ஒருவேட்பாளரை மாத்திரம் தெரிவு செய்யும் வாக்காளர்கள் புள்ளடியின் மூலம் தமது விருப்பத்தைத் தெரியப்படுத்தலாம். சீரான முறையில் புள்ளடி இடப்பட்டவாக்குச் சீட்டு அங்கீகரிக்கப்படும்.

எனினும் தாம் விரும்பும் முதன்மை வேட்பாளருக்கு புள்ளடி இடாமல் 2ஆவது ,3ஆவது விருப்பத்தெரிவுகளை மேற்கொள்ளும் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுக்கள் நிராகரிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாக்காளர் 1 என்ற இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் தான் விரும்பும் அபேட்சகருக்கு வாக்களிக்கலாம். 2ஆவது விருப்பத் தெரிவை மேற்கொள்வதற்கு 2 எனவும் 3ஆவது விருப்பத்தெரிவை மேற்கொள்வதற்கு 3 எனவும் குறிப்பிடவேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (து-7)

அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

ஒருநாட்டில் பிச்சைக்காரர்கள் இருந்தால் அங்கே திருடர்களும் கோயிலில் கொள்ளையடிப்பவர்களும் இருப்பார்கள். - பிளேட்டோ

# வலம்புரி

## வரவு - செலவுத் திட்டம் கடன்கழிப்பு நிகழ்வா?

2006 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒருநாட்டின் ஆட்சித் திறனை வெளிப்படுத்தக் கூடியவற்றில் அரச வரவு - செலவுத் திட்டம் முதன்மையானதாகும்.

வரவு - செலவுத் திட்டத்தின் தயாரிப்பில் இருந்து அந்த அரசின் வலிமைபற்றி கருத்துக்கூறமுடியும்.

எந்த அரசு மக்கள் நலன்பேணும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றதோ அந்த அரசினாலேயே நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுக்கமுடியும்.

மாறாக பாதுகாப்புச் செலவினத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்துவிட்டு துண்டுவிழும் தொகையை அதிகரித்துக்காட்டினால் நாட்டில் குண்டுவிழுமே தவிர, "அபிவிருத்தி" என்ற பதம் கிட்டவும் நெருக்கமாட்டாது.

இத்தகைய வரவு - செலவுத் திட்டமே இலங்கை அரசுகளின் நடைமுறையாக இருந்துவருகிறது.

பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்துக் காட்டுவது நல்ல நிதியமைச்சருக்குரிய அழகு என்ற நினைப்பு முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல் முதற்கொண்டு இன்றைய நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவரை உள்ளது.

இலங்கையின் வரவு - செலவுத் திட்ட வரலாற்றில் நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா தயாரித்த வரவு செலவுத் திட்டம் - அவரின் சுய பொருளாதாரக் கொள்கை என்பவற்றிற்குப் பின்னர் எந்த நிதியமைச்சரினாலும் நாட்டின் அபிவிருத்தி பற்றிய சிந்தனையில் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

கலாநிதி என்.எம்.பெரேராவின் பொருளாதாரக் கொள்கைகள் அவரின் பின்னரும் தொடரப்பட்டு இருக்குமாயின் இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடு என்னும் வகுதிக்குள் அடக்கப்பட்டிருக்கும்.

ஆனால் சுயநலம்மிக்க அரசியல்வாதிகள் மலிந்த இந்த மண்ணில் சுய நலனுக்காக என்.எம்.பெரேராவின் பொருளாதாரக் கொள்கைகளை சின்னாபின்னமாக்கினர்.

மக்களை வழிப்படுத்த வேண்டிய அரசியல்வாதிகள் ஆட்சிபீடத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதற்காக நாட்டின் எதிர்கால பொருளாதார ஏற்றத்தை இழுத்து விழுத்தினர்.

இதன் விளைவாக தற்போது வரவு செலவுத் திட்டம் என்பது வெறும் கடன்கழிப்பு நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது அதில் மக்கள் கொண்டுள்ள ஆர்வம் அடியோடு விழுந்துபோகுமளவிற்கு நாட்டின் வரவு - செலவுத் திட்டங்கள் நலிவடைந்து விட்டன.

இவையாவற்றிற்கும் அடிப்படைக்காரணம் மக்கள் நலனற்ற - யுத்த செலவை உள்ளடக்கிய வரவு - செலவுத் திட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமையே ஆகும்.

## சிங்கள அரசின் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்போம்

### புங்குடுதீவு பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறை கூவல்

சிங்கள பேரினவாதத்தை முதன்மைப்படுத்துகின்ற ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்களாகிய நாம் பகிஷ்கரிப்போம் இவ்வாறு புங்குடுதீவு பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக புங்குடுதீவு பொது அமைப்புக்களின ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமாதானம் என்ற போர்வையில் இன்று ஒப்பந்தம் எழுதப்பட்டு மூன்று வருடங்கள் உருண்டோடிய நிலைமையில் எமது மக்களுக்கு ஏதாவது உரிமைகள் கிடைக்கப் பெற்றதா? என்று சிந்திப்போமாக இருந்தால் அது கேள்விக்குறியான நிலையிலேயே காணப்படுகின்றது. பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் தங்களுடைய சொந்த இடத்துக்குப் போகமுடியாது அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது போன்று தேச விரோத சக்திகளின் ஆயுதம் களையப்படவில்லை. இதனால இன்று வடக்கு- கிழக்கு பிரதேசமே யுத்தக் களமாக மாறி நாளாந்தம் எமது இனம் அழிக்கப்பட்டு வருகினறது.

இவ்வாறான நிலைமையில் தென்னிலங்கை பௌத்த பேரினவாதிகள் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்கள. தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களான ரணில விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருமே சிங்கள பௌத்த பேரினவாத அரசியலில் ஆழகால் ஊன்றியவர்கள். தங்களுடைய இலட்சியத்தை அடைவதற்காக பதவி மோகம் கொண்டுதேர்தலில் களமிறங்கி உள்ள இருவரும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை அரசியல, இராணுவ, பொருளாதார அடிப்படையில் நிலை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளவர்கள். அதற்காக தமிழினத்துக்கு எதிராக எக்கட்சி செயற்பட முற்படுகின்றதோ அதற்கு வெற்றிக்கொடி காட்டி அவர்களையும் கூட்டுச் சேர்ககத் தயாராகவுள்ளார்கள். இதறகு இவர்கள் சார்ந்துள்ள கட்சிகளது கடந்த கால நடைமுறைகளே சான்றுகள் ஆகின்றன.

ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை இராணுவத்தை அதி நவீன வலுவுடன் கட்டியெழுப்பப் போவதாகவும் தமிழரின் மரபு வழிப்பிரதேச எல்லைப்பகுதிகளில் அங்கு ஏற்கனவே உள்ள சிங்கள குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் துணைப்படை அமைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஊடகங்கள் ஊடான தகவல்களை பார்க்கின்ற போது ரணில் தொட்டிலையும் ஆட்டி விட்டு பிள்ளையையும் கிள்ளி விடுபவர் போல் நடிக்கின்றார். அவருடாகக் கைச்சாததான ஒஸ்லோ உடன்பாட்டில் ஏற்றுக்கொண்ட கூட்டறிக்கையிலுள்ள சமஷ்டி குறித்தோ, தமிழின அழிப்புப் போரினாலும் ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் பாதிப்புக்குள்ளான தமிழர்களின் சொத்து, உயிரிழப்புக்களுககு ஏதாவது நலன் பேண தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொண்ட புனர்வாழ்வு அமைப்பை ஏற்படுத்துவது குறித்தோ ஒரு சொல்லுக்கூட ரணில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள விஞ்ஞாபனத்தில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல், போர் மற்றும இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த புனர்வாழ்வும் கிடையாது என்ற கருத்துக்களே முன்வைக்கப்பட்டுள்ளன. சிங்கள் பேரினவாதத்தையும் பௌத்த மதத்தையும் நிலை நிறுத்துவதற்காக மஹிந்த அதி உச்ச இனவெறி பிடித்த கொலை வெறியாகளான ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

மொத்தத்தில் பார்க்கின்ற போது இரு சிங்கள பௌத்த பேரினவாத வேட்பாளர்களும் சிங்கள மக்களின் தீர்மானத்தையே தமிழ் மக்களின் மீது திணிப்பதற்கு உறுதியாகவுள்ளார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்களின் நலனகளுடன் முரண்பட்டே காணப்படுகின்றது. எமது இனத்தின் சுதந்திரனமானதும் பாதுகாப்பானதுமான வாழ்வுரிமைகள் முன்னிறுத்தப்படவில்லை.

தேர்தல் வாக்கெடுப்பானது சிங்கள பௌத்த பேரினவாதத்தை முதன்மைப்படுத்திக் கொள்வதற்காகவே நடத்தப்படவுள்ளது. நாம் இன்று சம பலத்துடன் வரலாற்று திருப்பு முனையில் நிற்கின்றோம். நாம் ஓர் தேசிய இனம். எமக்கென்றோர் மொழி, கலை, கலாசாரம் உண்டு. தேசிய இனமாகிய நாம் எமது சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக எமது தேசியத்தை, மரபுவழித் தாயகத்தை, சுயநிர்ணய உரிமையை முன்வைத்து அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு பெரும் போராட்டங்களை நடாத்தி உயிர்களை விலையாகக் கொடுத்துள்ளோம். எமது மாவீரர்களுடைய தியாகத்தினாலும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்ற தேசியத் தலைவர் அவர்களினாலுமே இன்று தமிழ் இனம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

எனவே, ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷகரிப்போம். தேர்தலை பகிஷகரிப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு எமது இனத்தின் ஒற்றுமையை பறைசாற்றி சர்வதேசத்தை விழிப்படையச் செய்வோம்.

சிங்கள பேரினவாதிகளின் எந்த ஓர் அரசியல் நடைமுறைகளும் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது. எமது உரிமைக் கோட்பாடாகிய இடைக்கால தன்னாட்சி அதிகார சபையே எமது இலக்கு. இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-126)

## திருமலையில் சுழல்காற்று 24 வீடுகள் முற்றாக சேதம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரை அடுத்துள்ள நித்தியபுரியில் சுமார் 24 வீடுகள் சுழற்காற்று வீசியதால் பலத்த சேதம் அடைந்துள்ளன. வீட்டின் கூரைகள் முற்றாகத் தூக்கியெறியப்பட்டன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். நித்தியபுரி கிராம அபிவிருத்திச் சபையின் தலைவர் மகேந்திரராசாவையும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் சந்தித்தார்.

சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் திருகோணமலை பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர் உறுதியளித்தார். (த)

## ஐஸ்மஞ்சுவின் வீட்டில் பொலிஸார் சோதனை

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி லெப். கேணல் ரிஸ்வி மீடினின் கொலையாளியான பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஐஸ் மஞ்சுவின் வீட்டில் விசேட பொலிஸார் சோதனை நடத்தினர்.

அவரது மனைவி மற்றும் குழந்தையை கொழும்புக்கு அழைத்து வந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். திருமலையிலிருந்து 8மாதங்களுக்கு முன்பாகவே கட்டுகஸ்தோட்டவில் ஐஸ்மஞ்சு குடியேறியுள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய ஐஸ் மஞ்சுவின் நண்பர்களான புளொட் பாபு, சம்லி றொசான்,சம்லியின் சகோதரர்கள ஆகியோரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராணுவத்தின் தளபதி ஹசிம் கொலை வழக்கிலும் ஐஸ் மஞ்சுவுக்குத் தொடர்பிருப்பதாகவும் பொலிஸார் சந்தேகிக்கிறனர். (த)

## பிரயாணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டாளர்கள் விசனம்

(கொழும்பு)

இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சை விடைததாள் மதிப்பீட்டுக்குச் சென்றவர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லையென மதிப்பீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கைச் சேர்ந்த தமிழ் மொழி மூலம் ஆசிரியர்களே பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பு,கண்டி ஆகிய இடங்களுககுச் சென்று விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டனர்.

விடைத்தாள் மதிப்பீடு முடிந்து மாணவர்களுக்கான பெறுபேறுகளும் கிடைத்து சுமார் ஆறு மாதங்களாகியும இதுவரை விடைத்தாள் மதிப்பீட்டாளர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர். (அ-7)

## இலவச உலருணவு விநியோகம்

யாழ்.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யூலை,ஒகஸ்ட்,செப்ரெம்பர் மாதங்களுக்கான இலவச உலருணவு விநியோகம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ப. நோ.கூ.சங்கங்கள் மூலமும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்றவகையில், யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் மேற்படி மாதங்களுக்குரிய வழங்கற்கட்டளைகளை யாழ். மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் 9ஆம் திகதி புதன்கிழமை முதல் பெற்று விநியோக நடவடிக்கைகளை குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உதவித்திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார். (து)

## உடுவே தம்மாலோக தேரரைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டும் பாதாள உலகக் குழு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரரைக் கொல்ல பாதாள உலகக் குழு சதித் திட்டம் தீட்டியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

களனியாவில் இயங்கும் பாதாள உலகக் குழுவினரே தம்மாலோக தேரரைக் கொல்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கூறினர்.

இது தொடாபில் மலிககந்தவில் நடந்த இரகசிய ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக விசாரணை நடத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜாதிகஹெல உறுமய சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட தம்மாலோக தேரர் பின்னர் அதன் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்து சுயாதீனமாக இயங்கி வந்தார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதாகவும் அண்மையில அவர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



பிரார்த்தனை செய். அவன் கருணையே வடிவானவன். பக்தர்களுடைய பிரார்த்தனைக்குச் செவி மடுக்க மாட்டானா? அவன் கற்பக மரமாயிற்றே! அவனிடம் யார் எதை விரும்புகிறார்களோ அதைப் பெறுகிறார்கள். எப்போதும் மனதை ஒரு முகப்படுத்தி இறைவனைத் தியானிப்பவன் எந்தச் சூழ்நிலையில் எங்கே இருந்தாலும் இறைவனின் சந்நிதியில் இருப்பவன் ஆகிறான்.

சுவாமி விவேகானந்தர்

# அமைதிப் பேச்சுக்களின் போது புலிகளின் கப்பல்களை அழித்தோம்

## ரணிலின் சதியை அம்பலப்படுத்துகிறார் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

**அமைதிப்பேச்சுக்கள் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவு உருவாகியதும் அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளை சர்வதேச வலைப்பின்னலில் விழவைத்ததும் அமைதிப் பேச்சுக்களின் ஊடாக விடுதலைப் புலிகளின் கப்பல்களைஅழித்ததும் நாம்தான்என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மெறகொட தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமான டெய்லி மிரர் ஆங்கில நாளிதழுக்கு ரணில் விக்கிரமசிங்காவின் நெருங்கிய சகாவும் கடந்த காலத்தில் அமைதிப்பேச்சுக்களில் அரச பிரதிநிதியாகவும் பங்கேற்ற மிலிந்த மெறகொட அளித்துள்ள நேர்காணலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர்மேலும் குறிப்பிடுகையில்;

சிங்கள தீவிரவாதிகள் சொல்வது போல் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் நாட்டினது பாதுகாப்பு பலவீனப்படுத்தப்படவில்லை. மாறாக எமது ஆட்சிக்காலத்தில் வலுவாக இருந்தது. அமைதிப்பேச்சுக்களை நாம் நடத்திக்கொண் டிருந்த போதும் விடுதலைப்புலிகளின் இரு வர்த்தக கப்பல்கள் கடந்த 2003 மார்ச் மற்றும் ஜுன் மாதங்களில் சர்வதேச கடல் எல்லையில் தாக்கியழித்தோம்.விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேநாடுகளின் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் விடுதலைப்புலிகளின் பல ஆயுதக் கப்பல்களை நமது கடற்படை இடைமறித்தது.

ஆனால் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு ஆட்சிக்காலத்தில் இராணுவத்தினது செயற்பாடுகளில் குறுக்கீடுகள் இருந்ததாக கேள்விப்பட்டோம்.இராணுவத்தின் எண்ணிக்கையை நாம் குறைக்கப்போவதில்லை. உண்மையில் நமது இராணுவத்திற்கு கூடுதலான படையினர் தேவை. நாம் அரசு அமைத்தால் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தியா மற்றும் அமெரிக்க இராணுவத்தின் ஆய்வாளர்களின் ஆலோசனைகளுக்கு அமையவே நமது இராணுவ வலிமை அதிகரிக்கப்படும். ஆனால் இந்த விடயம் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக அமெரிக்க இந்திய படைகளை நாம் களமிறக்க உள்ளதாக ஊடக்ங்களில் வெளியாகியுள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை சர்வதேச பாதுகாப்பு வலயத்துடன் சிக்க வைத்துள்ளோம். அதன் மூலமாக அவர்கள் மீண்டும் ஒருயுத்தத்திற்கு திரும்புவது தடுக்கப்பட்டுள்ளது.நீண்ட காலமாக அமைதி ஒப்பந்தம் நீடிப்பதற்கு சர்வதேச பாதுகாப்புவலயத்தில்நாம் அனைவரும் இணைந்துள்ளதே காரணம். அப்படி இல்லாது இருந்தால் நாம் மீண்டும் யுத்தத்திற்கு திரும்பியிருப்போம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை ஒவ்வொருவரும் குறை சொல்கிறார்கள். ஆனால் அது தொடர்பில் எதுவும் செய்ய எவரும் முன்வரவில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்தால் யுத்தம் தான்.

அமைதி முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள புதிய சவால்களுக்கமை யுத்தநிறுத்தத்தை மீளாய்வு செய்வோம். அதில் எதுவித சந்தேகமும் இல்லை. இந்த உண்மையை விடுதலைப்புலிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் யுத்த காலத்தில் பிளவை ஏற்படுத்தியிருக்க முடியாது. அதற்கான சரியான சூழலை உருவாக்க வேண்டும் என்று ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். இதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துக் குள்ளேயே கருணாவை ஆதரித்து வலை விரித்திருந்தோம். துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்து வீதிகளைத் திறப்பது, வீதித்தடைகளை நீக்குவது போன்ற செயற்பாடுகள் மூலம் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின்கொடூரத்துக்குமாற்று சூழலை நாம் உருவாக்கிக் கொடுத்துள்ளோம்.

தற்கொடைதாரியாக செயற்படக் கூடியவர் கூட இந்த சூழ்நிலைகளை அவதானிக்கும் போது ஒரு முறைக்கு இரு முறை தனது மரணம் குறித்து யோசிக்க நேரிடும்.மற்ற பிரஜைகள் போல் தானும் உரிய வாய்ப்புடன் வாழ வேண்டும் என்றுதான் கண்டிப்பாக சிந்திக்கத் தூண்டும்.

“கருணா” என்பது அமைதி முயற்சிகளினால் உருவாக்கப் பட்டது.

எமது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கருணா குழுவுடன் நாம் செய்யவேண்டிய சிலவற்றை கண்டிப்பாக செய்வோம் என்றார் மிலிந்த மொறகொட. (இ)

---

## காவலரண் மீது கைக்குண்டு வீச்சு

(நெல்லியடி)

பொலிகண்டி ஆலடி இராணுவ காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.

இத்தாக்குதலில் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாக தெரிய வருகின்றது. (இ-101)

---

# வரவு செலவுத்திட்டம் நேற்று...

பெறப்படவுள்ளன. இதேவேளை இவையனைத்தும் வங்கிகள் இல்லாத அமைப்புக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படக் கூடியதாக வுள்ளது.

முத்திரை வரியின் மூலம் 3700 மில்லியன் ரூபா பெறப்படவுள்ள அதேநேரம், வரிகள் மூலம் 3500 மில்லியன்களும் ஏனைய வருமானங்கள் மூலம் 2700 மில்லியன் ரூபாய்களும் பெற்றுக்கொள்ளப் படவுள்ளன.

இந்த நிலையில் 9600 மில்லியன் ரூபா அரசாங்க ஊழியர்களின் கொடுப்பனவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்திற்கு 4600 மில்லியன் ரூபாவும், சமுர்த்திக் கொடுப்பனவுக்காக 6000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிகரெட் 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில பால் உற்பத்தி மையம் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய வங்கியின் நிதியுதவியுடன் யாழ். போதனா வைத்திய சாலை புனரமைக்கப்படவுள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9 சதவீதம்.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக தற்போது 10 சதவீதமாகக் காணப்படும் பணவீக்கத்தை 8 சதவீதமாகக் குறைக்கலாம் என்றும் நிதியமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

சகல கொடுப்பனவுகளுடன் கூடிய அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 11 ஆயிரத்து 630 ரூபா.

அரச சேவையிலும், படைத் தரப்பிலுமுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் மாதாந்தம் ஆகக் குறைந்த சம்பள அதிகரிப்பாக 1300 ரூபா என்ற அடிப்படையில், 1000 ரூபா வாழ்க்கைச் செலவினப் படியாகவும், தற்போதுள்ள சம்பளத்திற்கும் சிபார்சு செய்யப் பட்டுள்ள புதிய சம்பளத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் 50 சதவீதத்தை 2006 ஆம் ஆண்டிலும், மிகுதியை 2007 ஆம் ஆண்டிலும் வழங்கவிருப்பதாக நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வூதியக் கொடுப்பனவு 1000 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

சமுர்த்திக் கொடுப்பனவு 500 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் எடுக்கப்படாத லீவுகளுக்கு ஆகக்கூடியது 30 நாட்களுக்கு அரச ஊழியர்கள் கொடுப்பனவுபெற அனுமதிக்கப்படவுள்ளது. இக்கொடுப்பனவு குறிபிட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி ஊழியர் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் வழங்கப் படவுள்ளது.

எவ்வாறாயினும் ஆண்டுதோறும் ஊழியர்கள் தொடர்ந்து 7 நாட்கள் கட்டாயமாக விடுமுறை பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆகக்குறைந்த அதிகரிப்பாக 1000 ரூபா கிடைக்கும்.

அரச உத்தியோகத்தர்கள் ஆண்டொன்றுக்கு 21 நாட்கள் சமயாசமய விடுமுறையினையும், 24 நாட்கள் தவணை விடுமுறையையும் பெறும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர்.

அரச ஊழியர்கள் சலுகைத் தீர்வையுடன் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏதுவான புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

தற்போது 500 ரூபாவாக இருக்கும் சமுர்த்திக் கொடுப்பனவு அடுத்த ஆண்டில் 750 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

அடுத்த பெரும்போகத்திலிருந்து நெல்கொள்வனவின்போது ஒரு கிலோ நெல்லிற்கு ரூ 16.50 இருந்து 17 ரூபா வரையிலான உத்தரவாத விலை வழங்கப்படவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 18 வயது பூர்த்தியாகும் வரை வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு மாதாந்தம் 1500 ரூபா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அப்பிள்ளை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிற்குச் செல்லும் போது இத்தொகை இரட்டிப்பாக வழங்கப்படும். பல்கலைக்கழகத் திற்குச் செல்வதாயின் அத்தொகை மூன்று மடங்காக அதிகரிக்கப்படும்.

செனகல எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகளுக்கு மக்கள் வங்கியுடன் இணைந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறு சுகாதார அமைச்சர் கல்வித்துறை சார்ந்தோர்களை கேட்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற 20 சதவீத வரி 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்ட முத்திரைவரி மீண்டும் விதிக்கப்படவுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது பழைய பஸ்களுக்கு பதிலாக புதிய பஸ்களைப் பெற்றுக் கொள்வதற்கு சலுகை அடிப்படையில் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவ் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சி 6 தொடக்கம் 8 வீத வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இதன் மூலம் வறுமை ஒழிக்கப்படுமென நிதியமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருபோத்தல் சாராயத்தின் விலை 15 ரூபாவாலும், ஒரு போத்தல் பியரின் விலை 5 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தலுக்கு முன்பாக வரவு-செலவு திட்ட அறிக்கைத் தாக்கல் செய்ததை எதிர்த்து அனைத்து எதிர்க்கட்சிகளும் நேற்று நாடாளுமன்றத்தை புறக்கணித்தனர்.

நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம் லொக்குபண்டார தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. நிகழ்ச்சி நிரல் வாசிக்கப்பட்டபோது நிதியமைச்சர் சரத்அமுனுகம நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்திய நிதியமைச்சர் சரத் அமுனுகம அதிகாரப்பரவலாக்கத்துடன் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு என்று தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியினை ஏற்படுத்தமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படுவதை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதனுடன் இணைந்துள்ள கட்சிகளும் நாடாளுமன்றத்தை புறக்கணித்தனர்.

தேர்தலின் பின்னர் இந்த வரவு-செலவு திட்டத்தைக் கொண்டு வருமாறு தாங்கள் கோரிய போதிலும் அரசியல் தேவைகளுக்காக இந்த வரவு -செலவுத்திட்டம் கொண்டுவரப்படுவதால் தாங்கள் இதனை எதிர்த்து நாடாளுமன்றத்தை புறக்கணிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும்கட்சியினரும் ஜே.வி.பி. உறுப்பினர்களுமே நாடாளுமன்றத்திற்கு சமுகமளித்திருந்தனர். வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் இம்மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச-4)

---

## தபால் ...

வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்ற போதும் வாக்காளர்களில் பெரும்பாலானோர் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை சிறு அசம்பாவிதங்கள் தவிர நாடு முழுவதும் தபால்மூல வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை தபால்மூல வாக்களிப்பிற்காக 3 இலட்சத்து 23 ஆயிரத்து 428 பேர் தகுதிபெற்றிருந்தனர்.

இவர்களில் வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் பெரும்பாலானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-4)

வள்ளுவர் அக்கடமி
உரும்பிராய்
G.C.E A/L 2007
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்: 11.11.2005
வெள்ளி பி.ப 7 மணி
ஆசிரியர்: திரு.J.ரஞ்சித்காந் B.sc










இப்பத்திரிகை வலம்புரி, அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட்., யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.